வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயம், கும்பகோணம்
(கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கும்பகோணம்)
முன்னிலை – **திரு. G. மணிகண்டராஜா, பி.ஏ., பி.எல்.,**
தீர்ப்பாய நீதிபதி (கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி)
கும்பகோணம்
2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் தேதி வியாழன் கிழமை

**எம்.சி.ஓ.பி எண். 323/2019**

**CNR No.TNTJ190002812025**

அன்பு செல்வி, க/பெ சண்முகம், வயது 52,
முகவரி – தெற்கு தெரு, மேலயூர் அஞ்சல், திருவிடைமருதூர் தாலுக்கா.
.....மனுதாரர்

–எதிர்–

1) பால்ராஜ், த/பெ ஜோசப், வயது 52,
முகவரி – எண். 47/18A, வெள்ளாளர் நகர்,
பார்வதிபுரம், வடலூர், கடலூர் தாலுக்கா.
2. கோவிந்தராஜ், த/பெ மருதமுத்து, வயது 54,
முகவரி – தெற்கு தெரு, மேலயூர், கொத்துகோவில் அஞ்சல்,
திருவிடைமருதூர் தாலுக்கா.
.....எதிர்மனுதாரர்கள்

இம்மனு இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. லோகநாதன் அவர்கள் ஆஜராகியும், 1ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. முகமது ஷாஜஹான் B.Com., L.L.B., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## உத்தரவு

மனுதாரருக்கு 17.04.2017 ஆம் தேதி விபத்தினால் ஏற்பட்ட கொடுங்காயங்களுக்காக ரூ.9,00,000/– வட்டியுடன் இழப்பீடு கோரி மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவு 166 உ/இ3–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுவின் சுருக்கம்</u>:

மனுதாரருக்கு விபத்தின் போது வயது 50 ஆகும். மனுதாரர் விபத்தின் போது பெட்டிக்கடை மற்றும் இட்லி வியாபாரம் செய்து மாதம் ரூ. 18,000/- வருமானம் ஈட்டி வந்தார். கடந்த 17.04.2017அன்று இரவு 10.45 மணியளவில் மனுதாரர் கும்பகோணம்- காரைக்கால் கிழமேற்கு பிரதான சாலையில் கொத்துக்கோவில் மாரியம்மன் கோவில் அருகே உதயம் வீட்டிற்கு அருகே சாலையின் இடதுபுற ஓரமாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றுகொண்டிருந்தபோது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனராகிய 2ம் எதிர்மனுதாரர் TN 31 C 5094 பதிவு எண் கொண்ட TVS champ இருசக்கர மோட்டார் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதியதில் அவருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பிறகு மனுதாரர் அன்பு மருத்துவமனையில் 17.04.2017 மற்றும் 18.04.2017, 19.04.2017 ஆகிய தேதிகளில் உள்நோயாளியாக மூன்று நாட்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார். மனுதாரரின் வலது கால், முழங்காலுக்கு கீழே பெரிய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவ்வாறு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு விடுவிப்பு செய்யப்பட்ட பிறகும் மனுதாரர் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று ரூ. 2,00,000/- செலவு செய்துள்ளார். மனுதாரரின் வலது காலில் மேற்கண்ட கொடுங்காயத்தினால் தோற்ற மாற்றம் ஏற்பட்டு நான்கு இன்ச் உயர வித்தியாசம் இரண்டு கால்களுக்கு இடையே இருக்கிறது. மேலும் வலது காலின் பாதம் நொறுங்கிவிட்டது. மேற்கண்ட விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனராகிய 2ம் எதிர்மனுதாரர் மட்டுமே காரணம் என்பதால் 2 எதிர்மனுதாரர்களும் சேர்ந்தோ, தனித்தோ இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார்கள். 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக குற்ற எண். 85/2017 திருநீலக்குடி காவல் நிலையத்தில் பிரிவு 279, 337 இ.த.ச. வின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் ரூ. 9,00,000/- இழப்பீடு கோரி மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3) **<u>2ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>**:

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் விபத்து எதுவும் நடைபெறவில்லை. 17.04.2017 அன்று கொத்துக்கோவில் திரௌபதி அம்மன் கோவிலில் நடைபெற்ற திருவிழாவிற்கு செல்வதற்காக மனுதாரரும் இந்த எதிர்மனுதாரரும் மற்றும் இருதரப்பினரின் கிராமத்தைச் சேர்ந்தவர்களும் சென்று கொண்டிருந்தனர். மனுதாரர் காரைக்கால் பிரதான சாலையில் சென்று கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஊர்க்காரர்களுடன் சேர்ந்து சென்று கொண்டிருந்தார். 2ம் எதிர்மனுதாரர் மாரியம்மன் கோவில் அருகே இரவு சுமார் 12.00 மணியளவில் சென்றுகொண்டிருந்தபோது தெருவில் நின்று கொண்டிருந்த நாய் ஒன்று திடீரென மனுதாரரை நோக்கி பாய்ந்து வந்தது. அதை பார்த்த மனுதாரரும் அவருடன் சென்ற மற்றும் சிலரும் வேகமாக பின்நோக்கி ஓடி வந்தனர். அவர்கள் ஓடி வந்ததை பார்த்த இந்த எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டார். இருந்தபோதும் மனுதாரர் பயத்தில் ஓடி வந்ததால் எதிர்மனுதாரர் வாகனத்தை நிறுத்தி இருந்ததை கவனிக்காமல் அவருடைய வாகனத்தின் மீது மோதி கீழே விழுந்துவிட்டார். இந்த எதிர்மனுதாரரும் வாகனத்துடன் கீழே விழுந்ததில் அவருக்கு காயம் ஏற்பட்டது. மனுதாரருக்கும் மற்றவர்களுக்கும் ஏற்பட்ட காயங்கள் சிறிய காயங்கள் என்பதால் சிகிச்சை செய்து வீட்டிற்கு அனுப்பிவிட்டனர். 2ம் எதிர்மனுதாரர் கும்பகோணம், அன்பு மருத்துவமனையில் ஒரு நாள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். மனுதாரரும் இந்த 2ம் எதிர்மனுதாரரும் ஒரே தெருவில் வசித்து வருகின்றனர். மனுவில் குறிப்பிட்டுள்ளதுபோல் மனுதாரருக்கு வேலையோ, வருமானமோ இல்லை. மனுதாரருக்கு ஏற்பட்டது சிறிய காயம் ஆகும். இந்த எதிர்மனுதாரரிடமிருந்து பணம் பறிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் நடக்காத விபத்தை நடந்ததாக சொல்லி 5 நாட்கள் கழித்து பொய்யாக புகார் கொடுத்து

வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல.

**4) சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

மனுதாரர் தரப்பில் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மருத்துவக்குழு வழங்கிய இயலாமை சான்று நீ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. 1ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு சார்பு செய்ய மனுதாரர் நடவடிக்கை மேற்கொள்ளாததால் 1ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்**:

| | |
|---|---|
| 1) | யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது? |
| 2) | மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் யார்? |
| 3) | மனுதாரருக்கு கிடைக்ககூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு? |

**6) பிரச்சனை எண்.1 ற்கான தீர்வு:**

(i) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. கடந்த 17.04.2017அன்று இரவு 10.45 மணியளவில் மனுதாரர் கும்பகோணம்– காரைக்கால் கிழமேற்கு பிரதான சாலையில் கொத்துக்கோவில் மாரியம்மன் கோவில் அருகே உதயம் வீட்டிற்கு அருகே சாலையின் இடதுபுற ஓரமாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றுகொண்டிருந்தபோது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனராகிய 2ம் எதிர்மனுதாரர் TN 31 C 5094 பதிவு எண் கொண்ட TVS champ இருசக்கர மோட்டார் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதியதில் அவருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டு கும்பகோணம்

அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் மேற்கண்ட விபத்தில் மனுதாரருக்கு வலது முழங்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றும் வலது முழங்காலில் ஏற்பட்ட எலும்பு முறிவால் விகார தோற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் தலை உச்சியில் பலமாக காயம் ஏற்பட்டது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இடுப்பு, நெஞ்சு, கைகள், உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரரும், ஊர்க்காரர்களும் ஊர் கோவில் திருவிழாவிற்கு சென்று கொண்ருந்தபொழுது நாயானது திடீரென்று மனுதாரரை நோக்கி பாய்ந்தபொழுது மனுதாரரும் அவருடன் சென்றவர்களும் பின்நோக்கி ஓடிவந்தார்கள் என்றும் 2ம் எதிர்மனுதாரர் தனது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டார் என்றும் அதை கவனிக்காமல் மனுதாரர் 2ம் எதிர்மனுதாரர் மீது விழுந்ததில் 2ம் எதிர்மனுதாரர் வாகனத்துடன்கீழே விழுந்து அன்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் மனுதாரருக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் சிறிய காயம் ஏற்பட்டது என்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(iii) மேற்கண்ட விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை என்பது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும். மனுதாரர் சாலையின் இடது ஓரமாக சென்றுகொண்டிருந்தபோது 2ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்று மனுதாரருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டது என்றும் காலில் எலும்பு முறிவு மற்றும் உபாதைகள் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் நாய் விரட்டியதால் பயந்து 2ம் எதிர்மனுதாரரின் வாகனம் மீது விழுந்ததாக எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும்,

அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும் உடனே புகார் கொடுத்தும் 2ம் எதிர்மனுதாரரின் செல்வாக்கினால் புகார் தாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் விபத்திற்கு காரணம் 2ம் எதிர்மனுதாரர் என்றும் கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

(iv) திருவிழாவிற்கு சென்ற மனுதாரரை நாய் விரட்டி அவர் பயந்து பின்புறம் வந்த 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதிவிட்டார் என்றும் விபத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்றும் கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தள்ளுபடி ஆகியுள்ளதால் இவ்வழக்கு 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மட்டும் தொடர இயலாது என்றும் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றும் கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

(v) மனுதாரர் ம.சா.–1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் ம.சா.ஆ–1 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மனுதாரரிடமிருந்து வாக்குமூலம் பெற்று புகாரானது பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் அன்பு மருத்துவமனையில் 18.04.2017 அன்று அனுமதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் உரிய தகவல் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டிருக்கும். அதே சமயத்தில் மனுதாரர் மற்றும் 2ம் எதிர்மனுதாரருக்கு இடையே பணம் கொடுத்து வழக்கை முடிப்பதற்கான பேச்சு வார்த்தை நடந்ததாக ம.சா.–1ன் குறுக்கு விசாரணையில் தெரிய வருகிறது. எனவே, மேற்கண்ட காலதாமதம் வழக்கின் அம்சத்தை பாதிப்பதாக அமையவில்லை. மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து மோதினார் என்று

குறிப்பிடப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் பயந்து ஓடி வந்து இருசக்கர வாகனம் மீது விழுந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே விபத்தானது நடந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

(vi) மனுதாரர் மீது 2ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து மோதினார் என்று மனுதாரர் புகாரிலும் சாட்சியத்திலும் குறிப்பிட்டுள்ளார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் ஓடிவரும்போது 2ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டதாகவும் அதன்மீது மனுதாரர் விழுந்துவிட்டதாகவும் 2ம் எதிர்மனுதாரர் எதிருரையிலும் சாட்சியத்திலும் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் ஓடிவந்து 2ம் எதிர்மனுதாரரின் TVS Champ வாகனத்தில் விழுந்திருந்தால் மனுதாரருக்கு கடுமையான எலும்பு முறிவு மற்றும் கொடுங்காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. இரவு 11.00 மணியளவில் தான் சென்றுகொண்டிருக்கும்போது குறுக்கே நாய் வந்துவிட்டதால் விபத்து ஏற்பட்டதாக 2ம் எதிர்மனுதாரர் சாட்சியம் அளித்துள்ளார். எ.ம.சா.–1 சாட்சியத்திலிருந்தும் ம.சா.–1 சாட்சியத்திலிருந்தும் ம.சா.ஆ–1 முதல் தகவல் அறிக்கையில் உள்ள சங்கதிகள் மூலமாகவும் 2ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதியுள்ளார் என்று நிரூபணம் ஆகிறது. இவ்வாறு பிரச்சனை எண். 1க்கு தீர்வு காணப்படுகிறது.

**7) <u>பிரச்சனை எண். 2–ற்கான தீர்வு</u>:**

(i) மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் யார் என்பது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும். 2ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையாலும், கவனக் குறைவாலும் விபத்து ஏற்பட்டது என்றும், அவர் ஓட்டி வந்த வாகனத்திற்கு காப்பீடு பாலிசி இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்று கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். 1ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு சார்வு செய்வதற்கு

உரிய நடவடிக்கைகள் மனுதாரர் மேற்கொள்ளாததால் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் 1ம் எதிர்மனுதாரருடைய வாகனம் விபத்தில் சம்பந்தப்பட்டிருப்பதால் 1ம் எதிர்மனுதாரர் தரப்பினராக இல்லாத பட்சத்தில் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்று கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

(ii) விபத்தில் 1ம் எதிர்மனுதாரருடைய இருசக்கர வாகனம் சம்பந்தப்பட்டுள்ளது என்பதில் பூசல் இல்லை. மேற்கண்ட இருசக்கர வாகனத்தை விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரர் ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருடைய ஓட்டுனர் என்றோ, அவரின் கீழ் வேலை பார்ப்பவர் என்றோ 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் குறிப்பிடவில்லை. 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்திற்கு காரணம் 2ம் எதிர்மனுதாரர் என்பதாலும் 2ம் எதிர்மனுதாரர் தனிப்பட்ட முறையில் திருவிழாவை பார்ப்பதற்காக சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்று தீர்மானிக்கப்படுகிறது. பிரச்சனை எண் 2ற்கு இவ்வாறு தீர்வு காணப்படுகிறது.

8) **பிரச்சனை எண்.3–ற்கான தீர்வு:**

விபத்து சமயத்தில் மனுதாரர் பெட்டிக்கடை மற்றும் இட்லி வியாபாரம் செய்து மாதம் ரூ.18,000/– சம்பாதித்து வந்துள்ளார் என்று மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் கூறப்பட்டுள்ளது. விபத்தினால் மனுதாரருக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும் கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் 18.04.2024 முதல் 19.04.2024 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் ம.சா.ஆ–7ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ–7ல் இரண்டு எலும்பு முறிவுகள்

ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் மருத்துவக்குழுமம் முன்பு ஆஜராகி அவருக்கு இயலாமை சான்று வழங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்ட இயலாமையின் விழுக்காடு 13 % என்று நீ.ம.சா.ஆ–1ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயத்திற்கு இழப்பீடு பல்வேறு காரணிகளின் கீழ் தீர்மானிக்கப்படவேண்டியதாகும்.

9) <u>கொடுங்காயத்திற்கான இழப்பீடு</u>

மருத்துவ குழுமம் மனுதாரரை பரிசோதித்து வழங்கிய இயலாமை சான்று நீ.ம.சா.ஆ.1ல் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள ஊன விழுக்காடு 13% என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களுக்காக இயலாமையாக 13 சதவீதம் நிர்ணயிக்கப்படுகிறது. விபத்து 17.04.2017ல் நிகழ்ந்துள்ளது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற Chinnathambi Vs S. Deepa, National Insurance Company Ltd, 2020 (1) TNMAC 617 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட முன் தீர்ப்பு நெறியை பின்பற்றி 1 சதவீத ஊனத்திற்கு ரூ.5,000/– நிர்ணயித்தால் சரியானதாக இருக்கும் என தீர்மானிக்கப்படுகிறது. மேற்கண்ட தீர்ப்பு இவ்வழக்கிற்கு பொருந்தும் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. எனவே நிரந்தர இயலாமைக்கான இழப்பீடு 13 X 5,000 = ரூ.65,000/– (ரூபாய் அறுபத்தி ஐய்யாயிரம்) என நிர்ணயிக்கப்படுகிறது.

10) <u>வலி மற்றும் துன்பம்</u>

விபத்தினால் மனுதாரருக்கு இடதுகாலிலும் கணுக்காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு 3 நாட்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்ததால் அவருக்கு ஏற்பட்ட வலி மற்றும் துன்பம் அதிகமாக இருந்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை. எனவே, வலி மற்றும் துன்பம் அதிகமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே வலி மற்றும் துன்பத்திற்கு ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

**11) <u>உதவியாளர் செலவு</u>**

விபத்தினால் மனுதாரருக்கு இடதுகாலிலும் கணுக்காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு 3 நாட்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்ததால் அவருக்கு உதவியாளர் தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே உதவியாளர் செலவுத் தொகையாக ரூ.10,000/— (ரூபாய் பத்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

**12) <u>ஊட்டச்சத்து உணவு</u>**

விபத்தினால் மனுதாரருக்கு இடதுகாலிலும் கணுக்காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு 3 நாட்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்ததால் இயல்பாக நடக்க முடியவில்லை என்பதாலும் 13சதவீத இயலாமை உள்ளதாலும் அவருக்கு ஊட்டச்சத்து உணவு தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே ஊட்டச்சத்து உணவிற்காக ரூ.15,000/— (ரூபாய் பதினைந்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

**13) <u>போக்குவரத்து செலவு</u>**

விபத்தினால் மனுதாரருக்கு இடதுகாலிலும் கணுக்காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு தொடர் உபாதைக்கு பல முறை மருத்துவமனைக்கு சென்று வந்திருக்க வேண்டியிருந்திருக்கும். அதனை கருத்தில் கொண்டு போக்குவரத்து செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ.10,000/— (ரூபாய் பத்தாயிரம்) வழங்கப்படுகிறது.

**14) <u>வசதி இழப்பு</u>**

விபத்தினால் மனுதாரருக்கு இடதுகாலிலும் கணுக்காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவருக்கு இயலாமை 13 சதவீதம் என்று மருத்துவக்குழுமம் சான்று வழங்கியுள்ளது. இயலாமை 13 சதவீதம் என்பதால் வசதி குறைவு ஏற்படும் என்பதில் ஐயம்

இல்லை. எனவே, வசதி குறைவிற்காக ரூ.40,000/- இழப்பீடாக நிர்ணயிக்கப்படுகிறது.

15) <u>வருமான இழப்பு</u>

விபத்தினால் மனுதாரருக்கு இடதுகாலிலும் கணுக்காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட விபத்தானது 17.04.2017 அன்று நிகழ்ந்துள்ளதால் மாத உத்தேச வருமானமாக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) நிர்ணயிக்கப்பட்டு, மூன்று மாத வருமான இழப்பிற்காக 3 X 10,000 = 30,000/- (ரூபாய் முப்பதாயிரம்) என நிர்ணயிக்கப்படுகிறது.

16) <u>மருத்துவ செலவு</u>

மனுதாரர் விபத்தினால் விபத்தினால் மனுதாரருக்கு இடதுகாலிலும் கணுக்காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் உடலில் பல இடங்களில் காயம் மற்றும் கொடுங்காயம் ஏற்பட்டதாக ம.சா.-1 சாட்சியம் அளித்துள்ளார். அதற்க ஆதரவாக மருத்துவ சான்றுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மருத்துவ செலவு ரசீது ம.சா.ஆ-8 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மருந்துகள் வாங்கியதற்கான ரசீதுகளில் பெரும்பாலான ரசீதுகளில் மனுதாரரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. மனுதாரருக்கு இரண்டு எலும்பு முறிவுகள் இருந்து அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. மருத்துவ சிகிக்சைக்கு பணம் செலுத்தப்பட்டதற்கான ரசீதுகளில் எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்தப்பட்டது என்பது குறிப்பிடப்படவில்லை எனினும் மனுதாரருக்கு கொடுங்காயங்கள் விபத்தில் ஏற்பட்டது என்பது மறுக்கப்படாத ஒன்றாகும். விபத்தானது 17.04.2017ல் நிகழ்ந்துள்ளது. மனுதாரர் கும்பகோணம், அரசு மருத்துவமனையில் 17.04.2017ல் அனுமதிக்கப்பட்டு பின் அன்பு மருத்துவமனையில் 18.04.2017ல்

அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட விபரங்கள் ம.சா.ஆ.7 அன்பு மருத்துவமனை வழங்கிய விடுவிப்பு சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் பெயர் ரசீதுகளில் குறிப்பிட்டிருக்கும் பட்சத்தில் மருத்துவமனையின் முத்திரை இடப்பட்டிருக்கும் பட்சத்திலும் அந்த தொகையானது மனுதாரருக்கு கிடைக்க தக்கது. 19.04.2017ல் மனுதாரர் ரூ. 10,000/- மும், 21.03.2018ல் Imp plant removal மேற்கொண்டதாக குறிப்பிட்டிருக்கும் பட்சத்தில் அதற்காக ரூ. 10,000/- மற்றும் ரூ. 6,975/- செலுத்தியதாக ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் பெயர் குறிப்பிடாத ரசீதுகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மொத்த மருத்துவ செலவு ரூ. 44,274- என்று குறிப்பிட்டிருப்பினும் மனுதாரரின் பெயர் உள்ள ரசீதுகள் உள்ள தொகை ரூ. 28,913/- மட்டுமே மனுதாரருக்கு கிடைக்க தக்கது ஆகும்.

**17) <u>உடைகள் இழப்பிற்கான செலவு</u>**

விபத்தின் போது ஏற்பட்ட உடைகளுக்கான சேத இழப்பீடு ரூ.3,000/- (ரூபாய் மூன்றாயிரம்) என நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு இழப்பீடு தீர்மானிக்கப்படுகிறது.

| வ. எண் | இழப்பீடு தலைப்புகளில் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | கொடுங்காயத்திற்கான இழப்பீடு | ரூ.65,000/- |
| 2 | வலி மற்றும் துன்பத்திற்காக | ரூ.30,000/- |
| 3 | உதவியாளர் செலவிற்காக | ரூ.10,000/- |
| 4 | ஊட்டச்சத்து உணவிற்காக | ரூ.15,000/- |
| 5 | வசதி இழப்பிற்காக | ரூ.40,000/- |
| 6 | போக்குவரத்து செலவிற்காக | ரூ.10,000/- |
| 7 | வருமான இழப்பிற்காக | ரூ.30,000/- |
| 8 | மருத்துவ செலவிற்காக | ரூ. 28,913/- |
| 9 | உடைகள் இழப்பிற்காக | ரூ.3,000/- |
| | கூடுதல் | ரூ.2,31,913/- |

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மனுதாரர் மொத்த இழப்பீடாக ரூ.2,31,913/–(ரூபாய் இரண்டு லட்சத்து முப்பத்தொராயிரத்து தொளாயிரத்து பதிமூன்று மட்டும்) கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் பிரச்சனை எண்.3–ற்கு தீர்வு காண்கிறது.

1) இறுதியாக, இம்மனு பகுதியாக அதற்குரிய விகிதாச்சார செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2) 2ஆம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக ரூ.2,31,913/–(ரூபாய் இரண்டு லட்சத்து முப்பத்தொராயிரத்து தொளாயிரத்து பதிமூன்று மட்டும்) மற்றும் அதற்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையை வழங்க உத்தரவிடப்படுகிறது மற்றும் 1ம் எதிர்மனுதாரரை பொருத்து இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

3) இழப்பீட்டுத் தொகையினை மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து ஆண்டிற்கு 7.5% பின் வட்டியும் மற்றும் செலவுத்தொகையும் சேர்த்து 2ஆம் எதிர்மனுதாரர் இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கி கணக்கில் அதாவது Additional Chief Judicial Magistrate Court, Kumbakonam in MACTOP Account No.179701000009585, I.O.B. Court Branch, Kumbakonam directly by NEFT or RTGS மூலம் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

4) மனுதாரர் இந்நீதிமன்றத்தில் அவரது வங்கி கணக்கினை 10 நாட்கள் அவகாசத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

5) மனுதாரருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்கான குறைவுபடும் நீதிமன்ற கட்டணம் **ரூ.1,592/–ஐ** 15 நாட்களுக்குள் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

6) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் R.O.C. No.390–A/2014/F1 dated 13.02.2014–ல் பிறப்பித்துள்ள உத்தரவுபடி தனியாக தீர்ப்பாணை வனையப்படவில்லை.

| | |
|---|---|
| மனு தாக்கலான நாள் | 22.07.2019 |
| மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 25.07.2019 |
| கோரப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.9,00,000/- |
| வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.2,31,913/- |
| மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | ரூ.100/- |
| இழப்பீட்டிற்கான நீதிமன்ற கட்டணம் | ரூ.1,692/- |
| மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ.1,592 /- |

**செலவுத்தொகை பட்டியல்**:

| **தலைப்பு** | **மனுதாரர்** | **2ம் எதிர்மனுதாரர்** |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ.1,692/- | - |
| வக்காலத்து | ரூ. 10/- | ரூ. 10/- |
| வழக்கறிஞர் ஊதியம் | ரூ. 15,096/- | ரூ. 15,096/- |
| கூடுதல் | ரூ. 16,798/- | ரூ. 15,106/- |

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18 ஆம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

G MANIKANDARAJA
Digitally signed by G MANIKANDARAJA
Date: 2026.06.18 17:38:56 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,
கும்பகோணம்.

| | |
|---|---|
| **மனுதாரர் தரப்பு சாட்சிகள்:** | |
| ம.சா.1 | அன்புசெல்வி |
| **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:** | |
| ம.சா.ஆ.1 | 22.04.2015 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.2 | 18.04.2017 தேதியிட்ட அன்பு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு உண்மை நகல். |
| ம.சா.ஆ.3 | காயச்சான்றின் உண்மை நகல். |
| ம.சா.ஆ.4 | TN 31 C 5094 பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை உண்மை நகல் |
| ம.சா.ஆ.5 | TN 31 C 5094 பதிவெண் கொண்ட வாகனத்தின் பதிவு சான்று நகல் |
| ம.சா.ஆ.6 | 13.05.2017 தேதியிட்ட மருத்துவரின் குறிப்பு சீட்டு அசல். |
| ம.சா.ஆ.7 | 19.04.2017 தேதியிட்ட மருத்துவ விடுவிப்பு சான்று உண்மை நகல். |
| ம.சா.ஆ.8 | மருத்துவ செலவு தொகைக்கான ரசீதுகள் வரிசை அசல். |
| ம.சா.ஆ.9 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல். |
| ம.சா.ஆ.10 | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தின் நகல். |
| ம.சா.ஆ.19 | பார்வை மகஜர் பதிவிறக்க நகல் |
| நீ.ம.சா.ஆ.1 | மருத்துவக்குழுமம் வழங்கிய இயலாமை சான்று |
| **2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி** | |
| எ.ம.சா.1 | கோவிந்தராஜ் |
| **2ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :** | |
| இல்லை. | |

G MANIKANDARAJA
Digitally signed by G MANIKANDARAJA
Date: 2026.06.18 17:39:24 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,
கும்பகோணம்.